ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1816/6 - 2013 ජුනි මස 25 වැනි අඟහරුවාදා - 2013.06.25

1816/6 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**காணி எடுத்தற் சட்டத்தின் (460 ஆம் அத்தியாயம் )**

**7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது குறிப்பு இல: 3/1/3/15

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பிலக்கம் : 4/3/9/2011/WS/226

பொது மக்களின் தேவைக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணி யிருப்பதால், காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரங்கள் :-**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவில், ஹேவா விஸ்ஸ கோரளையின் சிறு பிரிவில், பொத்கொட என்ற கிராமத்திலமைந்த, நில அளவை மாஅதிபரால் அளந்து, 2013.05.18 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட மஹ 6263 ஆம் இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 1, 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ள “கலப்பிட்டஹேன” என்னும் காணியில் சுமார் 0.0275 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டுகள் இரண்டு (02):

**1. துண்டு இல. 1: காணியின் பெயர்: “கலப்பிட்ட ஹேன”; விஸ்தீரணம்: 0.0158 ஹெக்டயார்.**

வடக்கு: சோமா குலசேகர உரிமைகோரும் கலபிட்ட ஹேன மற்றும் பி. ஜி. பியசீலி உரிமைகோரும் கலபிட்ட ஹேன; கிழக்கு: பி.ஜி. பியசீலி உரிமைகோரும் கலபிட்ட ஹேன. எம். பீ. சமரகோன் உரிமைகோரும் கலபிட்டஹேன மற்றும் அரசு உரிமைகோரும் கலபிட்டஹேன; தெற்கு: அரசு உரிமைகோரும் கலபிட்டஹேன மற்றும் காணித் துண்டிலக்கம் 2; மேற்கு: காணித்துண்டிலக்கம் 2 மற்றும் ஜே. எஸ். எம். லீலாவதி உரிமைகோரும் கலபிட்டஹேன மற்றும் சோமா குலசேகர உரிமைகோரும் கலபிட்டஹேன. உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : திருமதி சோமா குலசேகர, பொத்கொட, மாரஸ்ஸன.

**2. துண்டு இல. 2: காணியின் பெயர்: “கலப்பிட்டஹேன”; விஸ்தீரணம்: 0.0117 ஹெக்டயார்.**

வடக்கு: சோமா குலசேகர உரிமைகோரும் கலபிட்ட ஹேன மற்றும் காணித்துண்டிலக்கம் 1; கிழக்கு: காணித் துண்டிலக்கம் 1 மற்றும் அரசு உரிமைகோரும் கலபிட்ட ஹேன. தெற்கு: அரசு உரிமைகோரும் கலபிட்டஹேன மற்றும் ஆர். பி. பஸ்நாயக உரிமைகோரும் கலபிட்ட ஹேன; மேற்கு: ஆர். பி. பஸ்நாயக உரிமைகோரும் கலபிட்டஹேன மற்றும் ஜே. எஸ். எம். லீலாவதி உரிமைகோரும் கலபிட்டஹேன. உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும்: திருமதி சோமா குலசேகர, பொத்கொட, மாரஸ்ஸன.

மேற்குறிப்பிட்ட காணிகளுக்கு உரிமைகோருபவரோ அல்லது வேறு தொடர்புகள் இருப்பதாக கூறும் சகலரும் தாமாகவோ அல்லது அவர்களின் கடிதம் மூலம் அதிகாரம் உள்ளவர்களாகவோ இருப்பின் 2013 செப்டெம்பர் மாதம் 16 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னைச் சந்திக்க வேண்டும்.

மேலும், 2013 செப்டெம்பர் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் அக்காணியையோ அல்லது அக்காணிக்கு தொடர்புடைய தத்தமது உரிமைகளின் தன்மைகளையும் அக்காணியை எடுத்துக்கொள்ளுதலுக்கான நட்டஈடு கோருவதற்குரிய காரணங்கள் பற்றிய விபரங்களையும்

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

நட்டஈட்டுத் தொகை, அத்தொகையை கணக்கீடு செய்த முறையையும் கடிதமூலம் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்க வேண்டும். அவற்றை உரிமைகள் கோரல் பற்றிய ஒப்பனை பரிசீலனைச் செய்யும்போது சமர்ப்பிக்க வேண்டும்.

மதுபானி பியசேன,
பிரதேச செயலாளர்,
பாத்த ஹேவாஹெட்ட.

பிரதேச செயலகம்,
பாத்த ஹேவாஹெட்ட,
தலாத்துஒய,
2013.06.21.
7 - 222

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டத்தின் (460 ஆம் அத்தியாயம் )

### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல: ගඉකෝ/ඉාලේ/6/4/3/09.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பிலக்கம்: LD/05/2008/WS/317

மேற் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பின் கீழ் 2013 மே மாதம் 09 ஆந் திகதி 1809/16 ஆம் இலக்கம் கொண்ட ஸ்ரீ லங்கா சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி யில் இலக்கம் 05 - 617 இன் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள காணி எடுத்தற் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை அகற்றி, அதற்கு பதிலாக வேறொரு திகதியை குறிப்பிட்டு அதனை உள்ளடக்குவதன் மூலம் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப் பட வேண்டும் என அறிவித்துக் கொள்ளப்படுகிறது.

| *அகற்ற வேண்டிய திகதி* | *அகற்றிய திகதிக்கு பதிலாக உள்ளடக்கப்பட வேண்டிய திகதி* |
|---|---|
| 2013 ஜூன் 12 | 2013 செப்டெம்பர் 25 |
| 2013 ஜூன் 05 | 2013 செப்டெம்பர் 18 |

டி.ஏ.டி.டப்ளியு. தயாநந்த,
பிரதேச சேயலாளர்,
கங்க இஹல கோரளை.

பிரதேச செயலகம்,
கங்க இஹல கோரளை ,
2013.06.20.
7 - 223